

# 12வது ஞானச்சாரியார்

## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர்

## அவர்களின் எழுத்துக்கள்





11வது ஞானச்சாரியார்

12வது ஞானச்சாரியார்


**ஆனி மாத வெளியீடு (June-July 2012)**

**பதினெண்சித்தர்கள் வகுத்தளித்த மெய்யான இந்துமத ஆண்டு 43,73,113**


**உள்ளுறைத் தலைப்பு**

# பதினெண்சித்தர் பீடாதிபதியின்

# பதினெட்டு அருளாட்சி ஆணைகள்

## சென்ற இதழின் தொடர்ச்சி

சென்ற இதழில் அருளாட்சி ஆணைகள் 1 முதல் 12 வரை வெளியிடப் பட்டன. இந்த இதழில் 13 முதல் 18 வரையுள்ள அருளாட்சி ஆணைகள் வெளியிடப் படுகின்றன. அதன் முடிவில் பின்னுரையும் வெளியிடப் படுகின்றது. இந்த நெடிய கட்டுரைக்கு ஒரு முடிவுரையும் 'ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்களின் வாக்கியமாகவே' உள்ளது. அது அடுத்த இதழில் வெளியிடப்படும்.

13வது ஆணை:- பெண்ணினத்தின் உயர்வு பற்றி மெய்யான இந்துமதம் கூறும் கருத்துக்களை வலியுறுத்தி செயல்படுத்த வேண்டியன பற்றிக் கூறுகின்றது.

14வது ஆணை:- அனைத்து வகை சமய சமுதாய அரசியல் ஆணைகளையும், நடவடிக்கைகளையும் தமிழ் மொழியிலேயே, தமிழர்களையே அலுவலர்களாகக் கொண்டு செயலாக்க வேண்டும் என்று கூறுகின்றது.

15வது ஆணை:- அனைத்துத் தலைமைகளையும், பொறுப்புக்களையும் தமிழர்களுக்கே தர வேண்டும்; தமிழிலேயே நிகழ்த்த வேண்டும் என்று கூறுகின்றது.

16வது ஆணை:- அருளாட்சி ஆணைகளை எப்படி செயலாக்குவது என்ற வழிமுறையைக் கூறுகின்றது.

17வது ஆணை:- அருட்கல்வித் திட்டத்தைச் செயலாக்கிட வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

18வது ஆணை:- சாதிகளை மெய்யாகவே ஒழிக்கும் வழிமுறையைக் கூறுகின்றது.


www.gurudevar.org
Email: indhuism@gmail.com
Cell: 9972130609


**தமிழ்மொழிப் பற்றும், தமிழர் நெறியான இந்துமதப் பற்றும் உள்ளவர்களுக்கு அனுப்பப்படும் சுற்றறிக்கை. இதை நகலெடுத்துத் தமிழ் தெரிந்த அனைவருக்கும் படிக்கக் கொடுக்கவும்.**


Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Siddhar Arasayogi Karuvooraar. Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram.
Printed by Ganapathi Printers, Camp Road, East Tambaram, Chennai..

# பதினெண்சித்தர் பீடாதிபதியின் 18 அருளாட்சி ஆணைகள் தொடர்ச்சி

**13வது அருளாட்சி ஆணை:**

பொய்யான ஹிந்துமதத்தால் பெண்கள் விதவையாக்கப் பட்டு ஒதுக்கி வைக்கப்படுவதும்; மாதந்தோறும் மங்கையர்கள் பூப்படையும் போது அதனைத் தீட்டு என்று கூறி அவர்களை அனைத்து நிகழ்ச்சிகளிலிருந்தும் ஒதுக்கி வைப்பதும்; ஆணுக்கு மட்டுமே மறுமணம் என்று கூறி பெண்ணின் வாழ்வைப் பாழாக்குவதும்; பெண்ணை விதவை என்று கூறிப் பிறந்ததிலிருந்து அணிந்து மகிழும் பூ, மஞ்சள், குங்குமம், பொன்நகைகள் துறக்கச் செய்து துன்புறுத்துவதும்; ஆண் மட்டுமே விருப்பத்திற்கேற்ப மறுமணம் செய்து கொள்ளலாம் என்று கூறிப் பெண்ணை அச்சுறுத்தி அடிமையாக்குவதும்; 'ஐந்தீ வேட்டல்', 'முத்தீ ஓம்பல்', '48 வகையான கருவறை ஊழியக்காரர்களின் பணிகள்' முதலியவற்றின் ஒன்றினைக் கூடப் பெண்கள் செய்யக் கூடாது என்று கூறிப் பெண்களை அருளுலகில் எந்தவொரு அருள் நிலையையும் பெறாத இருள்நிலையைப் பெறுமாறு செய்தும்; பெண்ணைப் பேயென்றும் பிசாசென்றும் மோட்சத்திற்குத் தடையாயிருக்கும் பீடை என்றும்; உலக ஆசையை வளர்க்கும் மாயாசத்தி என்று இழித்தும் பழித்தும் கூறிப் பெண்ணுரிமையைத் தடுத்தும் கெடுத்தும் செயல்பட்டும்; பெண்ணுக்குக் கல்வி உரிமையையும், சொத்துரிமையையும் மறுத்துப் பெண்ணை வெறும் போகப் பொருளாக்கியும்; கணவனை இழந்த பெண்ணை மொட்டையடித்தும் நல்லுணவு* உண்ணாமல் செய்தும்; [*பல்சுவை *உண்டி* என்று பாட வேறுபாடு இருக்கிறது ஏடுகளில்]; பயனற்றவர்களாக்கியும், பொதுவாகப் பெண்ணை வெளியிடங்களுக்கும், வெளி நாடுகளுக்கும் அழைத்துச் செல்லக் கூடாது என்று தடை விதித்து; பெண்ணை அரசியலிலோ, தத்துவ விசாரணையிலோ ஈடுபடக் கூடாது என்று தடுத்துக் கருத்துக் குருடர்களாக்கியும்; .... முதலிய கொடிய மானுட நல விரோதச் செயல்களும், துரோகச் செயல்களும் புகுத்தப் பட்டுத் தமிழ்ச் சமுதாயம் பாழாக்கப் பட்டுவிட்டது.

இவை அனைத்தையும் முறியடித்துச் சித்தர் நெறி எனும் மெய்யான இந்துமதத்தை மறுமலர்ச்சியும், வளவளர்ச்சியும், வலிமைச் செழிச்சியும், ஆட்சிமீட்சியும் பெறச் செய்யவேண்டும். அதற்காகப் பெண்ணினத்தைப் பற்றி மெய்யான இந்துமதம் கூறுகின்ற கருத்துக்களில் ஒரு சிலவாவது செயலாக்க வேண்டும்.

**(i) 'மாதந்தோறும் மலர்கின்ற மங்கையே மண்ணுலகப் பேரின்பம்'**

**(ii) 'இம்மண்ணுலகைப் பொன்னுலகாக்குகின்ற மகாசத்தியே பெண்',**

**(iii) 'மனித வாழ்வியலை இயக்குகின்ற அனாதிசத்தியே பெண்',**

**(iv) 'அனைத்துக்கும் ஆரம்பமாகவும் எல்லையாகவும் இருக்கின்ற ஆதிசத்தியே பெண்',**

**(v) 'மனிதப் பண்பின் கண்ணே பெண்',**

**(vi) 'விண்வெளியிலுள்ள சத்திகளை வாங்கித் தாங்கி மானுடர்களுக்கு வழங்கும் சத்தி பீடமே பெண்',**

**(vii) 'கன்னிப் பூசைக்கும், பருவ பூசைக்கும் கருவறை நாயகமாக இருப்பவளே பெண்',**

**(viii) 'ஏந்தரீகத் தாந்தரீக மாந்தரீகப் பூசைகளின் கடவுளாக இருப்பவளே பெண்',**

**(ix) 'அனைத்து வகையான நலங்களை வழங்கும் காயகல்பமே பெண்',**

**(x) 'தாயாக, தாரமாக, தானீன்ற மகளாக மாறுகின்ற முச்சூலியே பெண்',**

**(xi) 'சமய சமுதாய மரபுகள் அனைத்தையும் காத்திடும் காப்பகமே பெண்',**

.... .... ....

இவை போன்ற எண்ணற்ற சித்தர் நெறிக் கருத்துக்களைப் பரப்பினால்தான் பெண்ணை இழிவுபடுத்துவதும், அடிமைப்படுத்துவதும், வலிமையிழக்கச் செய்வதும், பெருமைகளைச் சிதைப்பதும், இன்ப வாழ்வைத் தடுத்துக் கெடுப்பதும், அறிவுக் கண்ணைக் குருடாக்குவதும் தடுக்கப் பட்டிடும்! தடுக்கப் பட்டிடும்! தடுக்கப்பட்டிடும்!

இதற்குப் பதினெண் சித்தர்களின் நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், பூசைமரபுகள், பூசைப்படிகள், பூசாவிதிகள், பூசாமொழிகள், 18 வகை வாக்குகள், வாக்கியங்கள், வாசகங்கள், பலவகையான அத்திறங்கள், சாத்திறங்கள், சூத்திறங்கள், நேத்திறங்கள்..... முதலியவைகளில் பொருளாழமிக்க அழகிய சொற்றொடர்கள் ஆயுதங்களாகப் பயன்பட்டிடும்.

சுருக்கமாகச் சொன்னால் **'மாதந்தோறும் மலரும் மலரான மங்கை பேரின்ப ஊற்றாக விளங்கிட வேண்டும்; அவள் எப்போதும் மஞ்சளும் பொட்டும் பூவுமாக மங்களமாக விளங்கிட வேண்டும். அவளே நடமாடுகின்ற கடவுளென உணர்ந்து போற்றிப் பேணிப் பாதுகாத்து வளர்த்திட வேண்டும். அவளே அனைத்துக்கும் தலைமைச் சத்தியாக வழியாக, வழிகாட்டியாக, வழித்துணையாகப் பயன்படுத்தப் படல் வேண்டும். மாதொருபாகனை (அம்மையப்பனை) கருத்தில் கொண்டு ஆணும் பெண்ணும் சமமே என்றுணர்ந்து அனைத்திலும் அனைத்து உரிமைகளும் வழங்க வேண்டும் அவளுக்கு......** இந்தக் கருத்து வாசகங்களை எல்லாம் செயலாக்குவதுதான் மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிக்குரிய வழிகள்.

பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங் -கரைக் கருவூரார் அவர்கள் (கி.மு.100 முதல் கி.பி. 150 முடிய) கலியுகத்தில் கலி பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்து இந்துமதத்தின் விளைநிலமான இந்தியாவிற்குள் வந்த பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியரால் வளவளர்ச்சியும், வலிமைச் செழிச்சியும், ஆட்சிநிலையும் நலிவடையப்பட்ட மெய்யான இந்துமதத்தை மறுமலர்ச்சி அடையச் செய்வதற்காகத் தோற்றுவிக்கப் பட்ட இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் சாதனங்களாகவும், போதனைகளாகவும் பயன்பட்டு வருவனவற்றின் சாரமே மேற்கூறிய பெண்ணின் பெருமை பற்றிய கருத்துக்கள்.

எனவே, அருட்பேரரசாக மலர்ந்திருக்கின்ற சோழப்பேரரசு மெய்யான இந்துமதத்தின் பெண்ணுரிமைகளையும் பெருமைகளையும் அரசியல் சட்டமாக அறிவித்துச் செயலாக்க வேண்டும். இதனைச் செய்யாமல் வடஆரிய மாயையில் மயங்கித் தயக்கம் காட்டும் அருள்மொழித் தேவன் எனும் இராசராசனை எதிர்த்துப் போரிடவே வேண்டியிருக்கிறது. இதனைப் புரிந்தும் புரியவைத்தும் செயல்பட்டிட்டால்தான் தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி பெருமைமிகு உரிமை வாழ்வு வாழச் செய்யும் மெய்யான இந்துமதம் மறுமலர்ச்சி பெற்றிடும். வளவளர்ச்சி அடைந்திடும், வலிமைச் செழிச்சி உற்றிடும், ஆட்சி மீட்சி பெற்றிடும்.

**14வது அருளாட்சி ஆணை:**

'மெய்யான இந்துமதமே உலக மதங்கள் அனைத்துக்கும் தாய்', 'தமிழ்மொழியே உலகமொழிகளுக்கெல்லாம் தாய்', 'தமிழினப் பண்பாடு உலகப் பண்பாடுகளுக்குத் தாய்', என்ற இந்தப் பேருண்மைகளால் தான் உலக ஆன்ம நேய ஒருமைப்பாட்டை உருவாக்க முடியும். ஆனால் இதற்காக மெய்யான இந்துமதம் தனது தனித் தன்மையை இழந்து விடக் கூடாது. தன்னுடைய இலக்கிய இலக்கணச் செல்வங்களை பிறமொழிகளின் வேட்டை பொருளாக்கி விடக் கூடாது.

இதேபோலத்தான் தமிழர்கள் உலக அளவில் பரந்து விரிந்துபட்ட ஒற்றுமையை உருவாக்க வேண்டுமென்பதற்காகத் தங்களின் இன வரலாறுகளின் பண்பாடுகளையும், உரிமைகளையும், பெருமைகளையும், பிற இனத்தவர்க்கு காணிக்கையாக்கி அடிமைகளாக்கி விடக் கூடாது. தமிழர்கள் ஏமாளித்தனமாகப் பிறரோடு கூடி வாழ வேண்டுமென்பதற்காக அன்னியர்களின் கூலிகளாக, வேலிகளாக, காவலர்களாக மாறி விடக் கூடாது.

அதாவது எல்லா மொழிகளும், இனங்களும், பண்பாடுகளும் தனித்தன்மை கெடாமலும், விடுதலை வாழ்வு பாதிக்கப் படாமலும், ஒன்றையொன்று ஆதிக்கம் செலுத்தாமலும், ஒன்றையொன்று சுரண்டி வாழாமலும் சமமாக நட்போடு வாழவேண்டும். அந்தந்த மொழிக்குரிய நாட்டில் அந்தந்த மொழியே அனைத்துத் துறைகளிலும் முழுமையான ஆட்சி நடத்த வேண்டும். அப்பொழுதுதான் நாட்டுப் பற்றும், இனப்பற்றும், இன ஒற்றுமையும், இன ஒருமைப்பாடும் விழிச்சி பெறும், மலர்ச்சி பெறும், வளர்ச்சி பெறும், எழிச்சி மிகு செழிச்சி பெறும்.

இப்பேருண்மையினைப் புரிந்து அருட்பேரரசின் மாமன்னன் அருள்மொழித் தேவன் அனைத்து வகை சமய சமுதாய அரசியல் ஆணைகளையும், நடவடிக்கைகளையும் தமிழ் மொழியிலேயே தமிழர்களையே அலுவலர்களாகக் கொண்டு செயலாக்க வேண்டும். இந்த அருளாணையைச் செயலாக்கத் தயங்கும் அவன் தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் பெரும் கேடு பயப்பவனாகி விடுவான். இவன் திருந்தா விடில் கருவறை ஊழியர்களின் அருட்படையும், தமிழுணர்வுடைய அரசியல் படையும், கருவூர்த் தேவனின் தலைமையில் போர் புரிந்தேயாக வேண்டும்.

இதனை உடனடியாகத் தமிழ்மொழிப் பற்றுளர்களும், தமிழ் இனப் பற்றுளர்களும், தமிழ் நாட்டுப் பற்றுளர்களும்..... முழுமையாகப் புரிந்தும் புரிய வைத்தும் நேரடியாகச் செயல்பட வரவேண்டும்! வரவேண்டும்!! வர வேண்டும்!!!

**15வது அருளாட்சி ஆணை:**

அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களிலும், கருவறைகளிலும், வெட்டவெளிக் கருவறைகளிலும் ஊழியம் புரிகின்ற அனைத்து வகையான ஊழியக் காரர்களுக்கும் நிறைவான ஏட்டறிவும், பட்டறிவும் வழங்குவதற்குரிய பயிற்சிகள் கருகுலங்களின் மூலமும், குருகுலங்களின் மூலமும், தருகுலங்களின் மூலமும், திருகுலங்களின் மூலமும் வழங்கப் பட்டேயாக வேண்டும்! வழங்கப் பட்டேயாக வேண்டும்! வழங்கப் பட்டேயாக வேண்டும்!

இதற்கான அனைத்து வகையான ஏற்பாடுகளையும் அவசியம் நேரடிப் பார்வையில் அந்தந்த வட்டாரத்து மக்களால் நிகழுமாறு செய்ய வேண்டும். இதற்குரிய பணிகளையும் கோயில் நிறுவன நிர்வாகங்களையும் கவனிப்பதற்காக வாரத்தின் ஏழு நாட்களிலும் செயல்படக் கூடிய ஏழு கரையினர்களாக (கூட்டத்தினர்களாக) ஒவ்வொரு வட்டாரத்து மக்களையும் பிரித்திடல் வேண்டும். இந்தக் கரையாளர்கள்தான் அனைத்துப் பொறுப்புக்களையும் அக்கரையோடு கவனித்து எக்குறையும் வராமல் மெய்யான இந்துமதத்தைப் போற்றிப் பேணிப் பாதுகாத்திடல் வேண்டும். இந்த நியதியைச் சட்டமாக்கிட வேண்டும். இதனையே நாட்டு நடப்பில் புதிய கட்டமைப்புக்களை உண்டாக்குவதற்குரிய திட்டங்களாகச் செயலாக்க வேண்டும்.

அதாவது ஆலய நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்கள் ஒழுங்காகவும் நேர்மையாகவும் மென்மையாகவும் திண்மையாகவும் அமைந்திட்டால்தான் சமுதாயத்தின் செயல்நிலைகளும் அரசியலின் இயக்க நிலைகளும்

உய்வு பெறும், உயர்வு பெறும், வாய்மை பெறும், நன்மை தரும். இதனை உணர்ந்து தமிழின அருட்பேரரசு அனைத்துத் தலைமைகளையும், பொறுப்புக்களையும் தமிழர்களுக்கே தர வேண்டும். தமிழிலேயே நிகழ்த்த வேண்டும்.

இதனைச் செயலாக்கத் தயங்கும் அருட்பேரரசனை எதிர்த்துப் போரிட அனைவரும் தயாராக வேண்டும். இது அருளாணை. இதனைச் செயலாக்குவதைப் பொறுத்துத்தான் வருங்காலத் தமிழர்களின் தன்னம்பிக்கையும், தன்மானமும், இனப்பற்றும், இன ஒற்றுமையும், மொழிப் பற்றும், நாட்டுப் பற்றும் உரிமை பெற்றிடும்! பெருமை பெற்றிடும்! விழிப்பு மிக்க செழிப்புற்றிடும்!

**16வது அருளாட்சி ஆணை:**

பதினெண்சித்தர்களின் மெய்யான இந்துமதம் பிறந்து வளர்ந்த இளமுறியாக் கண்டம் எனும் குமரிக் கண்டம் இரண்டு பெரிய கடல் கோள்களால், முறையே பஃறுளி ஆற்றங்கரையிலிருந்த தொன்மதுரையின் அருளாட்சிக்குட்பட்ட மிகப் பெரிய பகுதிகளை முதலிலும், குமரி ஆற்றங்கரையிலிருந்த தென்மதுரையின் அருளாட்சிக்குட்பட்ட மிகப் பெரிய பகுதிகளை இரண்டாவதாகவும் கடலுக்குள் இழந்தது. மிஞ்சிய சிதறிய சிறுசிறு நிலப் பகுதிகளில் மிகப் பெரிய பகுதியே விந்தியத்திற்குத் தெற்கே உள்ள தமிழகம். அதாவது, தென் இந்துநாடு.

இரண்டு கடல்கோள்களாலும் படிப்படியாக நிலத்துக்குள் இருந்து வெளிப்பட்ட விந்தியத்திற்கு வடக்கே வட இமயமலை முடிய உள்ள வட இந்துநாடு தோன்றிற்று. இளமுறியாக் கண்டத்திலிருந்த பனிமூடிய பன்மலையடுக்கத்து ஒரு பகுதியான தென் இமயமலை முதல் குமரியாறு வரை இருந்திட்ட மலைகளின் பெயர்களும், ஆறுகளின் பெயர்களும் அப்படியே புதியதாகத் தோன்றிய வட இந்துநாட்டிலுள்ள மலைகளுக்கும், ஆறுகளுக்கும் சூட்டப் பட்டன.

கடலுள் மறைந்த இரு பெரும் பகுதிகளுக்கு ஈடாக வட இந்துநாடு பதினெண் சித்தர்களால் ஏற்றுக் கொள்ளப் பட்டதால் வட இமயமலை முதல் தென் குமரிமுனை வரை இந்துமத யாப்புற்ற [யாப்பு = மிகத் தெளிவான வரையறுக்கப் பட்ட முடிவு = இலக்கணம்] நாடாக மாறியதால் இப்பெருநிலப் பரப்பு ‘இந்துமத யாப்பு நாடு’ எனும் பொருளில் ‘இந்தியா’ எனப் பெயரிடப்பட்டது.

இளமுறியாக் கண்டத்தின் நினைவாகவே 48 வகை வழிபடு நிலையங்களும், கருவறைகளும், வெட்டவெளிக் கருவறைகளும் வடபுலத்தில் உருவாக்கப் பட்டன. சந்திர குலத்துக்குரிய கருவூரரின் குருகுலப் பாரம்பரியமும், சூரிய குலத்துக்குரிய காகபுசுண்டரின் பாரம்பரியமும் முறையே யமுனைக் கரையிலும், கங்கைக் கரையிலும் உண்டாக்கப் பட்டன.

ஆனால் கந்தர்வ குலமும், தேவகுலமும், அசுரகுலமும், அரக்க குலமும் புதிதாகத் தோன்றிய வடபுலமான வட இந்தியாவில் நேரடியாகவும்; மனித வடிவிலும், மனித குலத்தில் தோன்றியும், மனித குலத்தோடு தொடர்பு கொண்டு இரண்டறக் கலந்தும் ..... எல்லா விதமான அருளுலகச் சிதைவுகளையும், சீரழிவுகளையும், இடர்பாடுகளையும், இருள்களையும் விளைவித்தார்கள்.

சூரிய குலப் போராட்டம் இராமாயணமாகவும், சந்திர குலப் போராட்டம் மகாபாரதமாகவும் நிலைத்த வடிவைப் பெற்றிட்டன. இவை இரண்டும் இரண்டு யுகங்களின் வரலாறுகளாக ஆயின. இவை இரண்டுக்கும் முந்திய முதல் யுக வரலாறுதான் பதினெண்சித்தர் பீடத்தின் முதல் பீடாதிபதியான அருட்பேரரசர் ஆதி

சிவனின் வரலாறும், அவருடைய மகனுன தேவசேனுபதி முருகப் பெருமானின் வரலாறும், மாபுராணமாகவும், கந்த புராணமாகவும் (முருக புராணம்), பிறமண் புராணமாகவும், மாயோன் புராணமாகவும், தேவேந்திரன் புராணமாகவும், வாயு புராணமாகவும், இயமன் புராணமாகவும், பிள்ளேயார் புராணமாகவும், கணபதி புராணமாகவும், விநாயகர் புராணமாகவும், இருடிகள் புராணமாகவும் (இருக்கு வேதம்), அசுர புராணமாகவும் (அசுர வேதம்), யாம புராணமாகவும் (சாம வேதம் தொடர்பான இரவுக்குரிய காற்று, கருப்பு, பேய், பிசாசு.... முதலியவர்கள் பற்றிய புராணம்), அதர்வான புராணமாகவும் (அதர்வான வேதம் தொடர்பான விண்வெளியில் இயங்கும் வானவர், விண்ணவர், அமரர், இயக்கர், .... முதலியவர் பற்றிய புராணம்) மலர்ந்தன.

சந்திர குலத்து முதல் அருட்பேரரசனுன ஆதிசிவனின் மகனுன முருகனுக்கு வாரிசு இல்லாமல் போனதால்; அவன் சித்தர்களுக்காக ஆறு படைவீடுகளிலும், 48 வகை வழிபடு நிலேயினர்களுக்காக (அண்டபேரண்டங்-களிலிருந்து வந்த சித்தர்கள் அல்லாதவர்கள்) ஆறு படைவீடுகளிலும், இம் மண்ணுலகத்தார்-களுக்காக ஆறு படைவீடுகளிலும் அருவுருவச் சித்தி நிலேயில் மறைந்து நிறைந்து பதினெண்சித்தர் பீடத்தையே பதினெட்டுப் படைவீடுகளால் பாதுகாத்து அருட்பேரரசுக்குரிய ஞான பீடமாக, சத்தி பீடமாக, சிவ பீடமாக, ஆன்ம பீடமாக..... உருவாக்கினுன், (முருகப் பெருமான்). இந்தப் பதினெண்சித்தர் பீடத்திற்கு சந்திரகுலத்துக்குரிய குருகுல நாயகர் கருவூரரே முதல் பீடாதிபதியாக ‘அனுதிக் கருவூரர்’ அனேவராலும் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார். இவரின் கருவழி வாரிசுகளே நான்கு யுகங்களுக்குள் 48 பீடாதிபதிகளாகத் தோன்றி இந்துமத அருட்பேரரசைக் கட்டிக் காக்க வேண்டும் என்ற நியதியும், நீதியும் வகுக்கப் பட்டது.

இம்மாபெரும் வரலாற்றின் செயல்நிலேகளே நான்காவது யுகமான கலியுகம் பிறந்து 2500 ஆண்டுகள் கழித்து இந்தியாவிற்குள் புகுந்த பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் தங்களுடைய சொந்த விருப்பு வெறுப்புகளுக்கேற்ப தங்களுக்குச் சாதகமாகச் சிதைத்து, குறைத்து, மறைத்து, திரித்து தேவையானவற்றைப் புகுத்திப் பொய்யான ஹிந்துமதத்தை உருவாக்கினுர்கள். இந்தப் பொய்யான ஹிந்துமதத்திற்குரிய பூசாமொழியாகத் தங்களுடைய மொழியைத் தமிழோடு கலந்து சமசுக்கிருதம் என்ற மொழியைத் தோற்றுவித்துக் கொண்டார்கள். [*சம = தமிழுக்குச் சமமாக அல்லது தமிழ் மொழியிலிருந்து சமமான பகுதியை எடுத்து; கிருதம் = செய்யப் பட்டது; அதாவது, வடஆரியர்கள் தங்களுடைய மொழியைத் தமிழுக்குச் சமமாக உருவாக்குவதற்காக தமிழிலுள்ள எழுத்துக்களேயும், சொற்களேயும், சொற்றொடர்களேயும், இலக்கியங்களேயும் பெரிய அளவில் தங்களுடைய பேச்சு வழக்கிலிருந்த வடஆரிய மொழியோடு கலந்து சமசுக்கிருதம் என்ற புதிய மொழியைத் தோற்றுவித்தார்கள்.*]

இப்படிப் புதிதாகத் தோற்றுவித்த மொழியை வளர்ப்பதற்காக இதையே தமிழுக்கும் மூல மொழி, தமிழர்களுடைய இந்துமதத்திற்கும் ஆட்சி மொழி என்ற கருத்தைத் திருட்டுத் தனமாகப் பரப்பினுர்கள். அப்பாவியான தமிழர்களில் ஏமாளியாக இருந்தவர்களேக் கருத்துக் குருடர்களாக்கித் தங்களுடைய திருட்டுத் தனமான கருத்துக்குப் பாதுகாவலர்களாக ஆக்கிக் கொண்டார்கள் பிருமணர்கள்.

இதனுல், இவர்கள் தமிழினத்தின் இரு கண்களான தமிழ் மொழியையும் மெய்யான இந்துமதத்தையும் இருட்டுத் தன்மைகளும், வறட்டுப் போக்குகளும், மடமைகளும், காட்டு மிராண்டித் தனமான கற்பனேகளும், மூடக்

கதைகளும், முடக்கு வாதங்களும், ஒடுக்கு முறைகளும், அடக்கு முறைகளும் உடையவையாகச் செய்து விட்டார்கள். தமிழினம் தன் இரண்டு கண்ணையும் கட்டிக் காட்டில் விட்டது போல் ஆகிவிட்டது.

இப்படிப்பட்ட நிலையில் தமிழினத்துக்குள் புதிய சில மதங்களும் தமிழர் சமுதாயத்திற்குள் அன்னிய நாகரிகங்களின் மோகங்களும், தமிழகத்திற்குள் (இந்தியாவிற்குள்) அன்னியர்களின் படையெடுப்புக்களும் அரசாங்கங்களும் .... மெல்ல மெல்ல ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து விட்டன. அந்த நிலையில்தான் மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிக்காக மெய்யான இந்துமதத்தின் மூலவர்களான தமிழர்களின் விடுதலைக்காக தமிழ்நாட்டின் அரசியல் ஆட்சி மீட்சிக்காக, உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டு வளவளர்ச்சிக்காகப் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் தோன்றிச் செயல்படத் துவங்கினார்கள். அவருடைய செயல்திட்டமெல்லாம் மத வழியாகச் சமுதாயப் புரட்சி செய்து தனிமனித அகப் பண்பாட்டிலும், புற நாகரீகத்திலும் தமிழ் மொழியையும், மெய்யான இந்துமதத்தையும் மறுமலர்ச்சியடையச் செய்து சமுதாயப் புரட்சியைச் செய்து தமிழர்களின் தனித் தன்மையைப் பாதுகாத்திடுவதே யாகும்.

அதாவது, தமிழின விடுதலைக்காக காலங்கள் தோறும் பதினெண்சித்தர் பீடாதிபதிகள் தோன்றிச் செயல்படுவதுதான் மரபு என்பதற்கேற்பவே இவர் தோன்றினாலும், இவருக்கு முன் வாழ்ந்த ஒன்பது பதினெண்சித்தர் பீடாதிபதிகளுக்கும் ஏற்படாத எதிர்ப்பும், சிக்கலும், தொல்லையும், சிரமமும், பகைமையும் இவருக்கு மட்டும் பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியரால் ஏற்பட்டன! ஏற்பட்டன! ஏற்பட்டன! எனவேதான், இவர் மெய்யான இந்துமதத்திற்கு நிலையான பாதுகாப்புக்களையும், வளங்களையும், வலிமைகளையும் ஊற்றுக்கண்ணாக இருந்து வழங்கக் கூடிய ஏட்டுலகச் செல்வங்களை யெல்லாம் மீண்டும் வடிவப் படுத்தி வாழ்வுறச் செய்தார். இதேபோல், நாட்டுலகச் செல்வங்களான அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும் கருவறைகளையும் வெட்டவெளிக் கருவறைகளையும் புத்துயிர்ப்புச் செய்து அருளாட்சி அமைப்புப் பணியில் தீவிரம் காட்டினார்.

ஆனால், சூழ்ச்சித் திறமிக்க பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் பாண்டியன் நெடுஞ்செழியனை வடஇமயம் வரை படையெடுத்துச் செல்லச் செய்து தங்களுடைய உறவினர்களான வடஆரியர்கள் அனைவரையும் போலியாகப் போரில் தோற்கச் செய்து; போர்க் கைதிகளாக மாறி குடும்பத்தோடு கூட்டம் கூட்டமாகப் பாண்டியன் படையோடு தமிழகத்துள் வந்து குடியேறச் செய்து விட்டார்கள். அப்படிக் குடியேறியவர்கள் தமிழகம் முழுவதுமுள்ள நகரங்களிலும், ஊர்களிலும், கிராமங்களிலும், குக்கிராமங்களிலும், பட்டிதொட்டிகளிலும் பரந்து விரிந்து ஒவ்வொரு இடத்திற்கும் சிலராகக் குடியேறினார்கள்.

இதனால் தமிழகம் முழுவதும் இவர்கள் ஒட்டக் கூத்தர்களாக, ஒற்றர்களாக, வேவுகாரர்களாக, அரசாணை அறிவிப்பாளர்களாக, அரசின் அச்சாணிகளாக மாறிவிட்டார்கள். இதனால் தமிழகத்தின் அரசியல் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களின் சதுரங்க விளையாட்டாக மாறிற்று. இதேபோல் இந்தப் பிருமணர்கள் தமிழ்ச் சமுதாயத்தின் அனைத்து வகையான சடங்குகளிலும், கோயில் ஊழியங்களிலும் நேரடியாக ஈடுபட்டுப் பணிவோடு சூழ்ச்சியாக வேலை செய்ய ஆரம்பித்தார்கள். இப்படி வேலை செய்யும் போதே தங்களால் முடிந்த வரை சமசுக்கிருத

மொழிச் சொற்களையும், சொற்றொடர்களையும், வேதநெறிக் கருத்துக்களையும், சனாதன தர்மங்களையும், சாத்திரச் சூத்திறங்களையும், பிற இலக்கியங்களையும் அரச மரத்தடியில் கூடுபவர் முதல் அரசனின் அவையில் கூடுபவர் வரை ஏற்றுக் கொள்ளுமாறு செய்திட்டார்கள்.

இதனால், சமசுக்கிருத இருள் கவிழ்ந்து, தமிழர்கள் இருட்டில் தட்டுத் தடுமாறி நடமாடுவது போல் மத வாழ்வில் தெளிவும் தெம்பும் அறிவும் ஆர்வமும் இல்லாதவர்களாக மாறினார்கள். அதாவது, தமிழர்களுக்காகச் செய்யப் பட்ட பூசைகளிலும் சடங்குகளிலும் அவர்களுக்குப் புரியாத சமசுக்கிருத மொழியில் அனைத்துவகையான பூசைமொழிகளும் ஓதப் பட்டன! சொல்லப் பட்டன! தமிழர்களும் குருட்டுத் தனமாகச் சமசுக்கிருத மொழியின் ஒலிகளைக் கேட்டுத் தலையசைத்து அருட்சத்தி பெற்றதாகக் கற்பனை செய்து கொண்டார்கள்.

ஆனால், எந்தவொரு தமிழனும் 64 திருவிளையாடல்களைச் செய்த சிவபெருமான் பேசிய மொழி தமிழ்மொழி என்பதையும், அருளை அநுபவப் பொருளாகப் பெற்று ஆங்காங்கே மெய்யான இந்துமத மறுமலர்ச்சியை உருவாக்கிய நாயன்மார்களும், ஆழ்வார்களும் பத்தி செலுத்திய மொழி தமிழ்மொழிதான் என்பதையும், மெய்யான இந்துமதத்தின் நான்கு யுகங்களிலும் தோன்றிய பத்தியார்களும், சத்தியார்களும், முத்தியார்களும், சித்தியார்களும் செயல்பட்ட மொழி தமிழ்மொழிதான் என்பதையும் ... எண்ணிப் பார்க்கவில்லை! எண்ணிப் பார்க்கவில்லை! எண்ணிப் பார்க்கவேயில்லை!

அதுவும் கலியுகம் பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தே சிறுசிறு கூட்டமாக இந்தியாவிற்குள் வந்து சேர்ந்த பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் எழுத்தற்ற பேச்சு மொழியும் (ஆரியம் என்பதே எழுத்தற்ற பேச்சு நிலையிலிருந்த வடஆரிய மொழி) தமிழ்மொழியும் சமமாகச் சேர்ந்து உருவான சமசுக்கிருத மொழியை நான்கு யுகங்களிலும் வாழ்ந்த ஒரு மொழியாக, அப்பாவித் தனமாக, ஏமாளித்தனமாக குழந்தைப் போக்கில் ஏற்றுக் கொண்டிட்ட தமிழர்களை எப்படித் திருத்த முடியும்! எப்படித் திருத்த முடியும்! எப்படித் திருத்த முடியும்! என்ற பெருங்கவலை நூற்றுக் கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்தும் தீராமல் போய்விட்டது.

எனவேதான், எமக்கு யாம் தனிமனிதராக உலகெலாம் அலைந்தும் திரிந்தும் பேசியும் எழுதியும் செயல்பட்ட காலத்திலிருந்த நம்பிக்கைகளும், செயல் வெற்றிகளும் மெய்யான இந்துமதத்தின் மூலவர்களான தமிழர்களுக்கென்றே ஓர் அருட்பேரரசை முழுமையாக உருவாக்கிய பிறகு பெற முடியாமல் போய்விட்டது! பெற முடியாமல் போய்விட்டது! பெற முடியாமல் போய்விட்டது! எனவே, யாம் மீண்டும் நிலவறைக்குள் தங்கிச் செயல்படுவதுதான் பயன் தரும் என்று முடிவெடுக்க நேரிட்டது.

இருந்த போதிலும், உலகம் முழுவதும் அருளாளர்கள் தோன்றி சித்தர்நெறி எனும் அருட்சோலையில் கனிகளும், மலர்களும் தருகின்ற மரம் செடிகொடிகளாகப் பசுமையோடு விளங்கி வருவதைப் பாதுகாப்பதற்காகவாவது அருளுலகத் திருட்டுத் தனங்களையும், குருட்டுத் தனங்களையும், இருட்டுத் தனங்களையும், மலட்டுத் தன்மைகளையும், வறட்டுத் தன்மைகளையும் அகற்றுகின்ற பணிகளைத் துவக்கிச் செல்ல வேண்டிய கடமையைப் பெற்றுள்ளோம் யாம்.

அதற்காகவே, ஆரிய மாயையில் மயங்கி மெய்யான இந்து மதத்தைக் காக்கும் கடமையில் தவறியவனாக வாழும் அருள்மொழித் தேவனை (முதலாம்) இராசராசனைச் செம்மைப் படுத்துவதற்காகக் கட்டிய தஞ்சைப்

பெரியவுடையார் ஆலயம் தோல்வி கண்டு விட்டதால்; அதைவிடப் பெரிய அரிய சீரிய நேரிய உயரிய பயன்மிகு மறுமலர்ச்சிச் சாதனமாக இந்தப் 'பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்' என்ற சாதனத்தை உருவாக்கினோம். இதனையே அரசாணைகளாக ஆக்கிப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்களிடமிருந்தும் அவர்களின் சமசுக்கிருத மொழியிடமிருந்தும் மெய்யான இந்து மதத்தைக் காப்பாற்றியாக வேண்டும்! காப்பாற்றியாக வேண்டும்! காப்பாற்றியாக வேண்டும்! என்று முடிவெடுத்தோம் யாம்.

ஆனால், பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி அமராவதி ஆற்றங்கரைக் கருவூரரின் அருளாணைப்படி செயல்படுத்த மறுத்த வடஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனால் மூன்று சங்கங்களால் காக்கப் பட்டிட்ட தமிழ் இலக்கிய இலக்கணங்கள் நெருப்புக்கு இரையாகின! எண்ணற்ற தமிழ்ப் புலவர்களும், மாணக்கர்களும் வெட்டப்பட்டார்கள். மதுரை ஆலவாய் மாமூதூர் (பிருமணர்களின் வெறியாட்டத்தால்) தரை மட்டமாகியது. வடஇமயத்துப் பிராகிருத மொழி களப்பிறர்களும், கங்கைக்கரைப் பாலிமொழி பேசும் கலப்பிறர்களும் தமிழ்மொழி காத்து வளர்த்த பாண்டியப் பேரரசை முழுமையாக அழித்து தமிழ்மொழிப் பற்றையும், ஆர்வத்தையும், ஈடுபாட்டையும் குழிதோண்டிப் புதைத்தார்கள்....

இப்படி எல்லாம் குருமொழி கேளா மாணக்கனான வடஆரியப் படை கடந்த பாண்டியன் நெடுஞ்செழியனால் அழிய நேரிட்டிட்ட தமிழ்மொழியின் இலக்கிய இலக்கணங்களும், தமிழின ஒற்றுமைக்கும் தன்னம்பிக்கைக்கும் தன்மானப் பிடிப்பிற்கும் தனித் தன்மைக்கும் போராடும் விடுதலை உணர்வுகளுக்கும் தேவையான அருளை அநுபவப் பொருளாக வழங்கும் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களும், கருவறைகளும், வெட்டவெளிக் கருவறைகளும், அருளுலகக் காவலர்களான அனைத்து வகையான சித்தர்களும், வழிபடு நிலையினர்களும், அருட்பட்டத்தவர்களும் .... பெருமளவில் கருகி உருத் தெரியாமல் போக நேரிட்டது.

பிருமணர்கள் மதுரையை எரித்த தீயில் உருகி ஓடிய பொன்னால் உருவாக்கப்பட்ட மலராகவே **சிலப்பதிகாரமும், மணிமேகலையும்** தோன்றின. இந்த இருபெரும் இலக்கியங்களையும் பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி '*நெருப்பில் பூத்த மலர்கள்*' என்றே குறிப்பிடுகிறார். எனவேதான், எம்மால் தஞ்சைப் பெரு நகரம் மதுரை போல் எரிந்து சாம்பலாவதைப் பொறுத்துக் கொள்ள முடியாதென்பதால் எமது தோல்வியை யாமே ஏற்றுக்கொண்டு நிலவறைக்குள் செல்கிறோம். கரையானும் செல்லுப் பூச்சியும் மெல்லக் காலப்போக்கில் எதையும் அரித்துத் தின்று சிதைத்து அழித்து விடுவது போல் இந்தப் பிருமணர்கள் அருட்பேரரசை காலப்போக்கில் முழுமையாகச் சாப்பிட்டு விழுங்கி விடுவார்கள். அதற்குப் பிறகுதான் தமிழர்கள் அனாதைகளாக, நாடோடிகளாக, அடிமைகளாகத் துன்புற்று அவலமுற்று தன்னுணர்விழந்து தன்மானம் அழிந்து முழுமையாக வீழ்த்தப் பட்டுத் தாழ்த்தப் படுவார்கள்.

எனவேதான், எமது அருளாணைகளை அரசாணையாக அறிவிக்க மறுக்கும் அருள்மொழித் தேவனின் அரசை நேரடிப் போரில் சந்திக்கக் கருவூர்த் தேவனுக்கு ஆணையிட்டோம். ஆனால், அரச மகளிர்களும், இராசேந்திரனும், பல்கலைக்கழகத்தார்களும், கருவறை ஊழியர்களும், அறங்-கூறவையத்தார்களும்..... மற்றவர்களும் கருவூர்த் தேவன் நேரடிப் போரில் இறங்கினால் 'மதத்தின்

தலைமையால் (அரசியல்) அருட்பேரரசு சிதைந்து சீரழிவுற்றது அல்லது வீழ்ச்சியுற்று தாழ்ச்சி பெற்றது' என்ற பழிச்சொல் வர நேரிட்டு விடும் என்று கூறியதால் சிந்தித்து நேரடிப் போரைத் தவிர்த்தோம் யாம். இவ்வாறு மதத்துக்கும் அரசுக்கும் எத்தகைய உறவுமுறைகளும், உரிமை நிலைகளும் இருக்க வேண்டும் என்பதை வரையறைப் படுத்தும் முயற்சியில் எம்மால் காலதாமதம் ஏற்பட்டதால் மெய்யான இந்துமதத்திற்கென ஏற்பட்ட அருட்பேரரசு பொய்யான ஹிந்து மதத்திற்கு அடிமையாகி விட்டது.

எனவேதான், யாம் கருவூர்த் தேவனை அரசோடு போரிடுவதை நிறுத்தி விட்டு மெய்யான இந்துமதத்தின் மறுமலர்ச்சிக்காகவும், ஆட்சி மீட்சிக்காகவும் தேவையான இலக்கியப் பணிகளையும், அ.வி.தி. நிலையங்களையும், அ.வி.தி. செயல்திட்டங்களையும், கோயில் திருப்பணிகளையும், 48வகை அருட் பட்டத்தார்களையும் தயாரிக்கும் பயிற்சி நிலையான கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் முதலியவைகளை இயக்குவதிலும் முழுமையாக ஈடுபடுமாறு கூறிய பிறகே யாம் நிலவறைக்குச் செல்கிறோம்.

ஆனால், எமது பதினெட்டு அருளாணைகளையும் காலங்கள் தோறும் விளக்கி யுரைத்து தமிழர்களின் வீழ்ச்சி நிலைகளையும், தாழ்ச்சி நிலைகளையும், இகழ்ச்சி நிலைகளையும் மாற்றுகின்ற பணியை வாழையடி வாழையாகத் தொடர்வதற்குத் தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விட்டே செல்கிறோம் யாம்.

எம்மால் உருவாக்கப் படுபவர்கள் அனைவருமே இலைமறை காயாகத்தான் தமிழர்களைத் தட்டி எழுப்பும் முயற்சியில் ஈடுபட வேண்டும். ஏனென்றால், தமிழர்களில் கணிசமான அளவினர் தங்களை மறந்து அன்னியர்களின் அடிமைகளாகவும், கூலிகளாகவும், காவலர்களாகவுமே வாழுகிறார்கள். இவர்களே தமிழுக்கு விரோதிகளாகவும், தமிழினத்திற்கு விரோதிகளாகவும், அப்பாவித் தனமாகச் செயல்பட்டிடுகிறார்கள். அதனால், தமிழர்களுக்குள்ளேயே சண்டை சச்சரவுகள் அதிகமாகி எதிர்பாராத வீம்பும், வம்பும், தும்பும், போட்டியும், பொறாமையும் வளர்ந்து அன்னியர்களையே தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும், வழித் துணைவர்களாகவும் போற்றிடும் இழிநிலைகளும், அழிநிலைகளும் ஏற்பட்டு விடும்.

அதனால் தமிழர்களிலேயே கணிசமான பகுதியினர் தமிழ்மொழிப் பற்றுக்கும், தமிழின ஒற்றுமைக்கும், தமிழ்நாட்டுணர்ச்சியின் செழிச்சிக்கும், தமிழரின் தன்மானத்திற்கும், தமிழரின் இனவிடுதலைப் போருக்கும் எதிர்ப்பாளர்களாக, மறுப்பாளர்களாக, பகைவர்களாக மாற நேரிட்டிடும்! மாற நேரிட்டிடும்! மாற நேரிட்டிடும்! அதாவது, தமிழர் அல்லாதவர்களின் பகையை விடத் தமிழர்களுக்குள்ளேயே தமிழ்மொழி உணர்வுக்கும், இன உணர்வுக்கும், நாட்டுணர்வுக்கும் எதிர்ப்போ, மறுப்போ, வெறுப்போ, பகையோ ஏற்பட்டு விட்டால் அதைச் சமாளிக்கவே முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! என்பதை முழுமையாக எண்ணித்தான் யாம் கருவூர்த் தேவனையும் செயல்பட விடாமல் தடுத்து விட்டு நிலவறைக்குள் செல்லுகிறோம்.

எமது கனவு நனவாவது அடுத்து வரும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியைப் பொறுத்ததேயாகும். அவரும் ஆரம்பம் முதல் இறுதி வரை முழுக்க முழுக்க குருதேவராகவே, குருபீடமாகவே மெய்யான இந்துமதத் தலைவராகவே, இந்துமதத் தந்தையாகவே, ஞானாச்சாரியாராகவே, அருட்பணி விரிவாக்கத் திட்டத் தலைவராகவே,

அருளாட்சி நாயகமாகவே,... ... செயல்பட்டு அனைத்துத் துறையினர்களையும் முறையான அருளுலகப் பயிற்சிகளையும், தேர்ச்சிகளையும் பெறுமாறு செய்திட்டால்தான் தமிழ்மொழியையும், தமிழினத்தையும், தமிழினத்தின் உயிர்நாடியான மெய்யான இந்துமதத்தையும், உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டையும் காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! அதற்காகவே ஒரு செயல்திட்டமாக இந்தப் பதினெண் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள் என்ற சாசனம் பரம்பரை பரம்பரையாகக் குருவாக்கியமாக, குருவாசகமாக, குருவாக்காக வாழுமாறு செய்யப்படுகின்றன.

**17வது அருளாட்சி ஆணை:**

பிறமண்ணினரான பிரும்மணர் எனும் வட ஆரியர்கள் நுட்பமான திட்டமிட்ட சூழ்ச்சிகளால் தமிழர்களை வீழ்த்தித் தாழ்த்திச் சுரண்டுகிறார்கள், அடிமைப் படுத்தி யிருக்கிறார்கள், ஒற்றுமை யிழந்து நிற்குமாறு செய்திருக்கிறார்கள். ஆனால், சீனர்களோடும், யவனர்களோடும், சோனகர்களோடும், வடபுலத்தார்களோடும், புத்த மதத்தார்களோடும், சமண மதத்தார்களோடும் மிகமிகச் சாதுரியமாக நட்போடும், தோழமையோடும் பழகி ஒற்றுமையாக வாழ்ந்து வருகிறார்கள். இன்னும் சொல்லப் போனால் இந்தப் பிரும்மணர்கள் தமிழர்களை என்றென்றும் இனப்பற்றோ, மொழிப் பற்றோ, நாட்டுப் பற்றோ, ஒற்றுமை யுணர்வோ தோன்றாதபடி பல பிரிவினர்களாகப் பிரித்து ஒருவரோடு ஒருவர் வேறுபட்டும், மாறுபட்டும், சண்டை சச்சரவுகளையும், போர்களையும் நிகழ்த்திக் கொண்டே யிருக்குமாறு செய்துள்ள சதிகளுக்குத் துணையாகவே எல்லாவித மாற்று மதத்தவர்களையும் தங்களுடைய நண்பர்களாகவும், தோழர்களாகவும் ஆக்கிக் கொண்டுள்ளார்கள்.

அதாவது, வேற்று நாட்டவர்களோ, மாற்று மதத்தினர்களோ, தமிழர்களை தன்னுணர்வும், தன்மானப் பிடிப்பும், இன ஒற்றுமையும், மொழிப் பற்றும், சமய விழிச்சியும், சமுதாய எழுச்சியும், அரசியல் கிளர்ச்சியும் அடையுமாறு செய்திடாமல் இருக்க என்னென்ன முன்னேற்பாடுகளைச் செய்ய வேண்டுமோ அந்தந்த முன்னேற்பாடுகளை எல்லாம் பிரும்மண சமய சமுதாயத் தலைவர்களிலிருந்து சாதாரணக் கூத்தாடிப் பிச்சைக்காரப் பிரும்மணன் வரை ஆர்வத்தோடு தொடர்ந்து செய்து வருகிறார்கள்.

இந்தப் பேருண்மையினை தமிழர்களில் அரசன் முதல் ஆண்டி வரை முறையாகவும் நிறையாகவும் புரிந்து தேவையான பொய்யான ஹிந்துமத மறுப்பு, விருப்பு, வெறுப்பு, எதிர்ப்பு, முறியடிப்பு..... முதலிய முயற்சிகளைக் குறைவில்லாமல் செய்யத் தொடங்க வேண்டும். இதற்காகவே பதினெண்சித்தர் பீடாதிபதியின் அருளாட்சி ஆணைப்படி உடனடியாகத் தமிழகத்திலுள்ள அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும், கருவறைகளையும், வெட்டவெளிக் கருவறைகளையும் மெய்யான இந்துமதப்படி குருதிப் பலியிட்டும், இறைச்சியுணவுப் படையலிட்டும், ஐந்தீ வேட்டல் முறைகளையும், முத்தீ ஓம்பலையும் பயன்படுத்திப் புத்துயிர்ப்புச் செய்ய வேண்டும். தக்கவர்களைக் கொண்டு அனைத்து வகையான எழுந்தருளிகளையும், (*ஞான உலாவில் எடுத்துச் செல்கின்ற அனைத்து வகையான சிலைகள்*) உயிர்பெற்று எழச் செய்ய வேண்டும். இதற்காகக் கோயில் கட்டிடங்கள் அனைத்தையும் (*இங்கு கோயில் என்ற சொல் அனைத்து வகையான வழிபாட்டு நிலையங்களையும், கருவறைகளையும், வெட்டவெளிக் கருவறைகளையும் குறிக்கும்*) செப்பனிட்டுப்

புதுப்பித்துத் திருப்பணிகள் செய்ய வேண்டும். பூசைக்குரிய பூக்களையும், இலைகளையும் தரக் கூடிய நந்தவனங்களையும், எழுந்தருளிகளின் ஞான உலாவிற்கும், தவசிகள், ஞானிகள், மோனிகள், சித்தியாளர்கள்.... முதலியவர்களின் அருள்வாழ்விற்கும் பயன்படக் கூடிய சோலைகளையும் செழுமையாக வளர்த்துக் காத்திடல் வேண்டும். திருக்குளங்கள் தூய நன்னீர் நிறைந்தவைகளாக இருக்குமாறு செய்ய வேண்டும். தேவையான அளவு புதிய புதிய மடங்களையும், பீடங்களையும், ஆதீனங்களையும், சன்னிதானங்களையும், குருகுலங்களையும் உருவாக்க வேண்டும். உடனடியாக மெய்யான இந்துமதத்தின் தத்துவ வித்துக்களாகவும், சித்தாந்த நாற்றுக்களாகவும் இருக்கின்ற அத்திற, சாத்திற, சூத்திற, தோத்திற, நேத்திற, வேத்திறங்களையும்; சுருதி, ஆரண, ஆகம, மீமாம்சைகளையும்; நேம, நியம, நிடத, நிட்டை, நீதிகளையும்; மந்திர, மந்திற, மந்தர, மாந்தர, மாந்தரீகங்களையும்; தந்திற, தந்திர, தந்தர, தாந்தர, தாந்தரீகங்களையும்; எந்திற, எந்திர, எந்தர, ஏந்தர, ஏந்தரீகங்களையும்; தவ, பூசை, ஞானங்களையும்; ஓம, ஓக, யாக, யக்ஞ, வேள்விகளையும்; கொடிநிலை, கந்தழி, வள்ளிகளையும்; பதினெட்டு வகையான வாக்கு வாக்கியம் வாசகங்களையும், ஓதங்களையும், தொண்ணூற்றியாறு போதங்களையும்; மற்ற புராண இதிகாசங்களையும், நூல்களையும், விரிச்சிகளையும்; ஓச்சுக்களையும், எள்ளல்களையும், ஏசல்களையும், அழுகைகளையும், தொழுகைகளையும், அரற்றல்களையும்...... தெளிவாக ஏடுகளில் எழுதித் தொகுத்திடல் வேண்டும். இவைகளைப் பயிற்றுவிக்க நாடெங்கும் பள்ளிகளையும், கலாசாலைகளையும், குருகுலங்களையும், கருகுலங்களையும், தருகுலங்களையும், திருகுலங்களையும் உருவாக்கி மெய்யான இந்துமதத்தை வளப்படுத்த வேண்டும், வலிமைப் படுத்த வேண்டும்.

அதாவது தமிழ்நாட்டுக்குள் வாழப்போகும் தமிழர்கள் அனைவரும் தமிழ்மொழியில் நல்ல புலமையும், மெய்யான இந்துமதத்தில் முழுமையான பயிற்சி முதிர்ச்சியும் பெற்றிடுமாறு செய்திட்டால்தான், தமிழன் பிறருக்கு அடிமைப்பட மாட்டான். பிறரிடம் கூலியாகவோ, கங்காணியாகவோ செயல்பட மாட்டான். அன்னியர்களைத் தலைவர்களாக ஏற்றுக்கொள்ளும் அப்பாவியாகவோ ஏமாளியாகவோ கோமாளியாகவோ வாழ்ந்திட மாட்டான்.

எனவே, உடனடியாக மேற்படி அருட்கல்வித் திட்டத்தைச் செயலாக்கிட அரசாணைகள் வழங்கப் பட்டாக வேண்டும். இல்லாவிட்டால் தமிழ்ச் சமுதாயம் என்றைக்குமே கட்டுக் கோப்பைப் பெருது. சமய சமுதாய பொதுச் சொத்துக்கள் அனைத்தும் வேற்று நாட்டார்களாலும், மாற்று மதத்தவர்களாலும் தொடர்ந்து கொள்ளை யடிக்கப் பட்டும்; சொந்தம் பாராட்டப் பட்டும்; சூறையாடப் பட்டிடும். என்றென்றும் தமிழர்களை அன்னியர்கள் ஆள நேரிட்டுத் தமிழர்கள் அனாதைகளாகவும், பஞ்சைகளாகவும், பராரிகளாகவும் வாழ நேரிட்டு விடும்.

இப்பேருண்மைகளைப் புரிந்தும் புரிய வைத்தும் செயல்படத் தயங்கும் அருள்மொழித் தேவனுன (முதலாம்) இராசராசனுேடு நேரடியான மோதலில் ஈடுபடுவதால் யாம் உருவாக்கிய அருட்பேரரசு எம்மாலேயே அழிய நேரிடும் என்பதை எண்ணியே யாம் தஞ்சைப் பெரிய கோயில் நிலவறைக்குள் நிறைகிறோம். எமது அருளாட்சி அமைப்புப் பணி மாபெரும் வெற்றியைப் பெற்றுத் தமிழின எழிச்சி வரலாருக அமைந்தாலும், அருள்மொழித் தேவனின்

வடஆரிய மாயையால் எனக்கு ஏற்பட்ட தோல்வியால் தமிழின எழுச்சி வீழ்ச்சியாகி விட்டது. ஆனால், இந்த வீழ்ச்சி உடனடியாக முழு அளவில் வெளிப்படையாகத் தெரிய வில்லை.

இன்றைக்கு இமயம் முதல் குமரி வரையுள்ள இந்த மெய்யான இந்துமத அருட்பேரரசு காலப்போக்கில் இருந்த இடமே தெரியாமல் போய்விடும். இன்றைக்குப் பாராளும் பைந்தமிழினம் யாராலும் மீட்க முடியாத அடிமை வாழ்வைப் பெற்று மிடிமையுறும். அந்த வேதனைகளை யெல்லாம் எண்ணித்தான் ஞானவேந்தாக, நாளோலக்கத்திலும், திருவோலக்கத்திலும் அமரப் போகும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதிக்குத் தேவையான பயனுள்ள செயல்திட்டமாக இந்தப் "பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகளை" மிகமிகத் தெளிவாக வழங்கிய பிறகே நிலவறைக்குள் செல்லுகிறோம் யாம். இதன் விளைவுகளை உணர மாட்டாதவனாக இருக்கிறான் அருள்மொழித்தேவன்.

ஆனால், இவன் என்றாவது ஒருநாள் தன்னுடைய அப்பனையும், தாத்தாவையும், சிய்யானையும், பாட்டனையும், பூட்டனையும், ஓட்டனையும், சேட்டனையும், தேட்டனையும் .... நீள நினைத்துப் பார்ப்பானேயானால் தனது தவறுகளுக்காகத் தன்னையே பலியிட்டுக் கொள்வான். இவனுக்குத் தற்கொலை தவிர வேறு முடிவில்லை எனக் கூறியே மோன நிலையில் ஞான தவத்திற்காக நிலவறைக்குள் செல்லுகிறோம் யாம்.

**18வது அருளாட்சி ஆணை:**

எட்டுப் பேர்கள் அருட்பேரரசுக்குரிய அரியணையில் அமர்ந்த பிறகுதான் அருள்மொழித்தேவன் உருவாக முடிந்தது. இதனை மறந்தே இராசராசன் தன்னிச்சையாகத் தான்தோன்றித்தனமாகச் செயல்படுகிறான். இந்துமத மறுமலர்ச்சிக்காக உருவாக்கப் பட்ட அருட்பேரரசு; பிருமணர்களின் சனாதன வேதமத வளவளர்ச்சிக்காக மட்டுமே உழைக்கின்ற அவல நிலை பிறந்து விட்டது.

இதனால் போர் வீரப் பரம்பரையினரில் தொழிலால் படையாட்சி, கள்ளர் (ஒற்றர்), மறவர், தேவர், அம்பலம், அரையர் (ராயர்), முதலி, பிள்ளை, பண்டாரம், அய்யர், ஆசாறி, #ஒட்டார் (#போரில் ஈடுபடாத வேலையாட்கள்), $சாத்தார் ($போர்த் தளவாடங்களை ஏற்றிச் செல்லும் வண்டிகளை ஓட்டுபவர்கள்), பறையர் (போரில் பறையடிப்போர்), a-துடியர், b-கடம்பர், c-பாணர் ( a,b - இசைக் கருவி இயக்குவோர், c - வாய்ப்பாட்டு பாடுவோர்) d-நாயக்கர் (d - படைப் பிரிவுகளில் சிறு பிரிவுகளின் தலைவர்), e-சேனாதிபதி (e - பெரிய படைப் பிரிவுகளின் தலைவர்) .... என்று ஏற்கனவே பெயர் பெற்றிருந்தவர்கள்; அந்தந்தப் பெயர்களிலேயே தனித்தனிச் சாதிகளாக ஆக்கப் பட்டு சமுதாயத்தில் பிரிவுகளும், வேற்றுமைகளும், ஏற்றத் தாழ்வுகளும், சண்டைச் சச்சரவுகளும் அதிகமாக்கப் பட்டு விட்டன.

இதனைப் பிறமண்ணினரான பிருமணர்கள் எனும் வடஆரியர்கள் நன்கு திட்டமிட்டுச் செயலாக்கிப் பெரிய பெரிய வெற்றிகளைப் பெற்று விட்டார்கள். யார் காலத்திலும் இல்லாத சாதிகளின் எண்ணிக்கையும், பிரிவினை வெறியும், உயர்வு தாழ்வு பாராட்டும் வெறிப் போக்கும், இராசராசன் காலத்தில்தான் பெருகி விட்டன. இதனால் திருமண உறவுகள் அந்தந்தச் சாதிக்குள்தான் நிகழ வேண்டுமென்ற

கட்டுப்பாடு பிருமணர்களின் மாபெரும் சதித் திட்டமாக உருவாகி விட்டது. இந்தச் சதித்திட்டம் மாபெரும் வெற்றியாகி சாதிவெறி சுந்தரசோழனின் காலத்திலேயே கட்டுப் படுத்த முடியாத அளவு சண்டைகளாகவும், சிறுசிறு போர்களாகவும் நாட்டளவில் வளர்ந்து விட்டன. (சாது + ஆதி = சாதி = மிகப் பெரிய முனிவர்களை ஆதியாகக் கொண்டு தோன்றிய பரம்பரையினர் என்பதே இந்தச் சாதி என்ற சொல்லுக்குப் பொருள். இது தொழில் அடிப்படையில் மக்களைப் பிரிக்கப் பிருமணர்களால் பயன்படுத்தப்பட்டு விட்டது.

இவற்றை யெல்லாம் ஒழித்துக் கட்ட உருவாக்கப் பட்ட ஆதித்த கரிகாலனைப் பிருமணர்கள் ஒழித்துக் கட்டினார்கள். அந்தப் பிருமணர்களின் ஆதரவாளனான அருள்மொழித் தேவன் இராசராசனாக மாறியதும் பிருமண அடிமையாகவே மாறிவிட்டான். இதனைப் பயன்படுத்திப் பிருமணர்கள் எண்ணூறுக்கும் மேற்பட்ட சாதிகளைத் தங்களின் சமசுக்கிருத மொழியின் சாத்திறங்களின் மூலம் சட்டப் பூர்வமாக்கிச் சாதிகளை நிலைத்த வடிவம் பெறச் செய்துவிட்டார்கள். இதனால், தமிழர்கள் இன உணர்வு, இனப்பற்று, இன ஒற்றுமை, மொழிப்பற்று, நாட்டுப் பற்று, பண்பாட்டுப் பற்று, நாகரீகப் பிடிப்பு, மத ஒற்றுமை..... முதலிய அனைத்தையும் மறந்து துறந்து மூட்டையை அவிழ்த்துக் கொட்டியதும் நாலாபக்கமும் சிதறியோடும் நெல்லிக் காய்கள் போலாகி விட்டார்கள். இந்த நிலையை மாற்றுவது எளிதல்ல! எளிதல்ல! எளிதல்ல! எளிதேயல்ல!

தமிழர்களுக்கு இந்தச் சாதிப் பிரிவுகளால்தான் மாபெரும் வீழ்ச்சியும், தாழ்ச்சியும் விளைந்துள்ளது. இதனை இராசராசனால் இன்றைக்கு உணர முடியவில்லை. காலப்போக்கில் தமிழர்கள் சாதிகளால் பிரிந்து, வேறுபட்டும் மாறுபட்டும் சண்டை சச்சரவுகளை வளர்த்துக் கொண்டே இருப்பார்கள். அப்போது பிருமணர்கள் நிலையாக உயர்ந்த சாதிக்காரர்களாக, தமிழகத்து மேட்டுக் குடி மக்களாக, தமிழர்களுக்குச் சாத்திரிகளாக, குருமார்களாக, ஆசிரியர்களாக மாறிடுவார்கள். அதாவது, தமிழர்களைச் சாதிச் சண்டைகளால் என்றென்றும் பிரிந்து கிடக்கும்படி சூழ்ச்சி செய்திட்ட பிருமணர்களே சமுதாயத்திலும், சமயத்திலும் உயர்ந்தவர்களாக வழிகாட்டிகளாக, தலைவர்களாக என்றென்றும் விளங்கிடுவார்கள்.

இத்திட்டத்தை எவரும் எளிதில் அசைத்து விட முடியாதபடி “இந்தச் சாதிப் பிரிவுகளை கடவுளே ஏற்படுத்தியதாகவும்; சாதிகளையுடைய இந்துமதமே ‘வர்ணாசிரம தர்மம்’ காத்திடும்; அதுவே சனாதன தர்மம் எனப்படும் வேதமதம்; வேதத்திலேயே சாதித் தர்மங்கள் வலியுறுத்தப் பட்டுள்ளன என்று கூறியும்; சாதி உயர்வு தாழ்வுகளையும், வேற்றுமைகளையும், சாதி யடிப்படையில்தான் தொழில்களைச் செய்ய வேண்டுமென்ற சட்ட திட்டங்களையும்.... பிருமணர்கள் தங்களின் சமசுக்கிருத மொழியின் வேத இதிகாச புராணங்களின் மூலமும் சாத்திரங்களின் மூலமும் நியாயப் படுத்தி நீதிகளாகவும், நியதிகளாகவும், இந்துமதத் தர்மங்களாகவும், இந்துமதச் சமுதாயச் சட்டதிடக் கட்டுப்பாடுகளாகவும் ஆக்கி விட்டார்கள். இந்தச் சனாதன தர்ம வர்ணாசிரமக் கொள்கையுடைய வட ஆரியப் புதிய இந்துமதம்தான் **பொய்யான ஹிந்துமதம்** என்று பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங் கரைக் கருவூராரால் குறிக்கப் படுகின்றது.

அதாவது, அவர் காலத்திலேயே சிலந்தி வலை பின்னுவது போல் இந்தச் சூழ்ச்சி மிக்க சுரண்டல்காரப் பிருமணர்கள் பொய்யான ஹிந்துமதத்தை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிட்டார்கள். இப்பணி இராசராசன்

காலத்தில் முழுமையான வடிவமும் வாழ்வும் செயலும் செல்வாக்கும் பெற்று விட்டது.

எனவே, **உடனடியாகப் பிருமணர்கள் நமது வழிபாட்டு நிலையங்களுக்குள்ளும், கருவறைப் பூசைகளிலும், வெட்டவெளிக் கருவறைப் பூசைகளிலும், பிற திருவிழாக்களிலும், சமுதாயச் சடங்குகளிலும், திருநாள்களிலும் கலந்து கொள்ளக் கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! என்று உடனே அரசாணை விடுக்க வேண்டும். சமசுக்கிருத மொழியின் ஒலிகூடத் தமிழக எல்லைக்குள் கேட்கக் கூடாது. சீனர், யவனர், சோனகர் போல் இந்தப் பிருமணர்களும் ஊருக்கு வெளியே தனி இடங்களில்தான் வாழ வேண்டு**மென்று உடனே அரசாணை வழங்கப் படல் வேண்டும்.

இந்தப் பிருமணர்கள் ஊருக்குப் புறம்பாக ஒதுக்குப் புறமாக ஒண்டி வாழும் ஒட்டக் கூத்தர் சேரிகளையமைத்தே வாழ வேண்டும். இல்லாவிட்டால், இவர்கள் வெட்டுக் கிளிக் கூட்டம் விளைந்த வயலை முழுமையாக நாசம் செய்து விடுவது போல் தமிழர்களை முழுமையாக சிதைத்துச் சின்னபின்னப் படுத்திக் கோழைகளாகவும், அடிமைகளாகவும் ஒற்றுமையற்ற அனாதைக் கும்பல்களாகவும், இலம்பாடித் திரியும் பஞ்சைகளாகவும், நாதியற்ற நாடோடிகளாகவும், சூடுசுரணையில்லாத நடைப் பிணங்களாகவும் மாற்றிடுவார்கள்! மாற்றிடுவார்கள்! மாற்றிடுவார்கள்!

எனவே, இவர்கள் (பிருமணர்கள்), அனைவரையும் ஏமாற்றுவதற்கு முன்னரே! இவர்களைத் தமிழ்ச் சமயத்திலிருந்தும், சமுதாயத்திலிருந்தும் உடனே அகற்றி ஒதுக்கி வைத்திடல் வேண்டும். இல்லாவிட்டால் என்றாவது ஒருநாள் காட்டு மிருகங்களை வேட்டையாடுவது போல் இவர்களை (இந்தப் பிருமணர்களை) வேட்டையாடும் நிலைமை வளர்ந்திடும்! வந்திடும்! எச்சரிக்கை. எனவே, இராசராசன் இந்தப் பிருமணர்களிடமிருந்து தனது இனத்தாரைக் காப்பாற்றிடத் துணிந்து அரசாணைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

அத்துடன் ஒரே சாதிக்குள் திருமண உறவுகள் ஏற்படுத்தக் கூடாது என்ற தடையையும் விதித்து; அனைத்து சாதியினரும் ஒன்றாகிடக் கலப்புத் திருமணங்களை முழுமையாகத் தோற்றுவிக்க வேண்டும். சாதியினால் விளையக் கூடிய அனைத்து விதமான சண்டை சச்சரவுகளையும் கலவரங்களையும் உடனே அடக்கித் தீர்வு கண்டு நீதி வழங்கி முழுமையாக முடிவு செய்ய வேண்டும். எந்தக் காரணத்தை முன்னிட்டும், அரசாங்கத்திலோ, பூசைகளிலோ, கல்விச்சாலைகளிலோ, மருத்துவக் கூடங்களிலோ, சேவலோன் கலைப் பயிற்சிச் சாலைகளிலோ, அங்காடிகளிலோ, சத்திர சாவடிகளிலோ, .... சாதி வேறுபாடு காட்டக் கூடாது; எவருடைய சாதியையும் விசாரிக்கக் கூடாது... என்று அரசாணை விதிக்க வேண்டும்.

ஏனெனில் சூழ்ச்சி மிக்க சுரண்டல்காரப் பிறமண்ணினரான ‘பிருமணர்கள்’ சாதிகளின் அடிப்படையில் தமிழர்கள் வாழுகின்ற தெருக்களையும், நீராடுந்துறைகளையும், குடிதண்ணீர் நிலைகளையும், பிணம் போய்ச் சேரும் புதைகாடுகளையும், சுடுகாடுகளையும், குலதெய்வங்களையும், உடையுடுத்தும் வகைகளையும்.... தனித்தனியாகப் பிரித்து விட்டார்கள். இதனால், சாதிகளை ஒழிப்பது எளிதல்ல! எளிதல்ல! எளிதல்ல! எளிதேயல்ல!

அதனால், இந்தச் சாதிகளை உருவாக்கிப் பயிராக்கி வளர்த்துக் காத்து வாழ்க்கை நடத்தும் அன்னியர்களை பிறமண்ணினர்களை, சாத்திரிகளை, பஞ்சாங்கப் பயல்களை, உஞ்சிவிருத்திகளை.... முழுமையாக ஒழிப்பது அல்லது தமிழ்நாட்டை விட்டே ஓட்டுவதுதான் வழி. ஆனால், இவர்கள் இமயம் முதல் குமரி வரை விரவிப் பரவிக் கிடக்கும் கட்டுப்பாடான சிறு கூட்டத்தார்கள். இவர்கள் எந்த மொழி பேசினாலும், தங்களுடைய சமசுக்கிருத மொழியின் மூலம்

ஒற்றுமையுடன் ஒருமைப்பாடும் கட்டுப்பாடும் வளர்த்துக் கொண்டே வாழுகிறார்கள். இவர்கள் அன்னியர்கள் என்பதால் தங்களுடைய இனம் குறைந்து விடாமல் பிற இனத்தாரோடு திருமண உறவுகளைச் செய்து கொள்ளாமல் இருக்கிறார்கள்.

மேலும் இவர்கள் தங்களுடைய வேத நாகரிகத்தை எள்முனையளவு கூட மாற்றிக் கொள்ளாமல் வறட்டுப் பிடிவாதமாக வெறிநிறைந்த தங்களுடைய நாகரிகப் பற்றை வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால்தான் இவர்களுக்கிடையிலும் பற்றும் பாசமும், ஒற்றுமையும், கட்டுப்பாடும் இருக்கிறது. எனவே, இவர்கள் எதைச் செய்தாவது தங்களைக் காப்பாற்றிக் கொள்ளத் தயாராக இருக்கிறார்கள். இவர்களுடைய மேலாமினுக்கி வாழ்க்கைக்கு பேருதவி புரிவதாகவே இருக்கிறது, இவர்கள் உண்டாக்கிய பொய்யான ஹிந்துமதம்.

அதாவது பொய்யான ஹிந்துமதத்தை ஒழித்தால்தான் இந்தப் பிருமணர்களின் சூழ்ச்சியான ஆட்சியை ஒழிக்க முடியும். இவர்கள் எந்த நிகழ்ச்சிகளிலும் அல்லது முயற்சிகளிலும் வெளிப்படையாகவோ, நேரடியாகவோ ஈடுபடுவதே யில்லை. அதாவது, இவர்கள் திரைமறைவிலேயே இருந்து எதை வேண்டுமானாலும், எப்படி வேண்டுமானாலும் காணிக்கை யாக்கியோ அல்லது பலியாக்கியோ எவரையும் தங்களுக்குச் சாதகமாக்கிப் பாதுகாப்புத் தேடிக் கொள்வார்கள். இதன்படிதான், இராசராசன் முழுமையாகப் பிருமணர்களின் காவலனாகி விட்டான். இந்தப் பிருமணர்களும் இராசராசனுக்குப் பாதுகையாகவும், பாதத் தூளிகையாகவும் ஆகி விட்டார்கள்.

எனவே, இராசராசன் எமது பதினெட்டு அருளாட்சி ஆணைகளை அரசாணைகளாக அறிவிப்பான் என்று நம்ப இயலவில்லை. அவனுடைய பாதுகாப்பில் உள்ள இந்தப் பிரமண்ணினர்களைக் கருவூர்த் தேவன் தனது அருட்படைகளோடு சென்று நேரடிப் போரில் ஒழிப்பதைத் தவிர வேறு வழியில்லை. இதனை இராசராசனின் ஆட்சிக்கு எதிரான புரட்சியாகவோ, சதியாகவோ கருதத் தேவையில்லை. ஏனெனில், இராசராசனின் அரசாங்கம் தமிழ்மொழிக்கும், தமிழ் இனத்துக்கும் துரோகமாக விரோதமாக தமிழின வீழ்ச்சிக்கும், தாழ்ச்சிக்கும் காரணமாக இருக்கும் பிருமணர்களைக் கண்மூடித் தனமாகப் பாதுகாத்து வருகிறது.

எனவே, தமிழ்மொழியையும், தமிழ் இனத்தையும் பாதுகாப்பதற்காக கண்மூடித் தனமாகச் செயல்படும் அரசாங்கத்தை மாபெரும் குருதிப் புரட்சியின் மூலம்தான் திருத்திட முடியும்! முடியும்! முடியும்! இதைத் தவிர எமக்கு வேறு வழி தோன்ற வில்லை! எனவேதான், பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரர் செய்தது போல்; யாம், தனிமனிதர்களை விழிச்சியும் எழிச்சியும் பெறச் செய்து கிளர்ச்சி மிகு புரட்சி வளவளர்ச்சி அடையச் செய்துள்ளோம்.

அதாவது, சமுதாயப் புரட்சியின் மூலம்தான் அரசால் சாதிக்க முடியாததையும் சாதிக்க முடியும் என்பதை மெய்ப்பிக்கவே தற்கொலைக்குச் சமமான வீரதீரச் செயல்களில் ஈடுபடக் கூடிய பட்டாளத்தை [பட்டு + ஆள் + அம் = ஆட்கள் மரணத்திற்கும் தயாராக இருப்பது] தயாரிக்க நேரிட்டது. இந்தப் பட்டாளத்தைத் தலைமை தாங்கி நடத்தக் கருவூர்த் தேவனுக்கு ஆணையும் பிறப்பித்து விட்டோம். இந்த உள்நாட்டுப் போரின் முடிவைப் பொறுத்துத்தான் இந்துமத மூலவர்களாகவும், காவலர்களாகவும் இருக்கின்ற தமிழர்களுக்கு வருங்காலத்தில் அமையப் போகும் விடிவு இருக்கும்.

எனவேதான், அருளாட்சி ஆணையை **“பதினெண் சித்தர் பீடாதிபதியின் அருளாட்சி ஆணைகள்”** என்று எமது கருத்துப் புரட்சியையும், செயல் புரட்சியையும் இலக்கியமாக எழுதி உள்நாட்டுத் தமிழர்களுக்கும், வெளிநாட்டுத் தமிழர்களுக்கும் ஆயிரக் கணக்கில் படியெடுத்து அனுப்பும் பணியை பல்கலைக் கழகத்தின் மூலம் துவக்கியுள்ளோம். இதையும் தடுக்க அரசாணை விடுக்கிறான் இராசராசன். இவனை எதிர்க்காமல் என்ன செய்வது?

நாடு தழுவியுள்ள நிலக் கிழார்களும், வணிகர்களும் நமது பொருளாதார நூலினால் புண்பட்டு இராசராசனை ஆதரிப்பவர்களாக மாறிவிட்டார்கள். இதனால், தமிழ் நாட்டில் ஏற்கனவே இருக்கும் எண்ணற்ற சாதிகளுக்கு இடையில், ஏழை என்றொரு சாதியும், பணக்காரர் என்றொரு சாதியும் இவை இரண்டிலும் சேராத நடுத்தரச் சாதி என்றொரு சாதியும் தோன்றி விட்டன. இந்த மூன்று சாதிகளும்தான் மற்ற அனைத்துச் சாதிகளையும் வென்று உள்ளடக்கிப் புதிய போராட்டங்களையும் போர்களையும் வளர்த்து வருகின்றன.

இவைகளை ஒழிப்பதென்றாலும் அரசாங்கமே அனைத்தையும் தன்னுடைமையாக்கிக் கொண்டு அனைவரையுமே உழைப்பாளிகளாக மாற்ற வேண்டும். இல்லாவிட்டால் துட்டுக் கடைக்காரர்களும், வட்டிக் கடைக்காரர்களும், பட்டுக் கடைக்காரர்களும், மிட்டாய்க் கடைக்காரர்களும், நவதானிய கடைக்காரர்களும் நாட்டை ஆளுவார்கள். இவர்களின் வடிவிலே வடபுலத்தார்களும், அன்னியர்களும், பிறமண்ணினர்களும்தான் தமிழ்ச் சமுதாயத்தையும், அரசியலையும் ஆட்டிப் படைக்கும் கேடு காலம் உருவாகிடும். அப்பொழுது இன்றுள்ள அருட்பேரரசு போன்று எந்த ஒரு பேரரசும் நிலைக்க முடியாது.

ஏனெனில், பணவெறி பிடித்த பேராசைக் கார வியாபாரிகள் இந்தியாவில் நூற்றுக் கணக்கான சிற்றரசர்கள் ஆட்சி செய்தால்தான் அரசாங்கங்களுக்கு இடையில் உள்ள போட்டிகளையும், பொறாமைகளையும், பகைமைகளையும், சண்டை சச்சரவுகளையும், போர்களையும் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் சம்பாதித்திடுவார்கள்! சம்பாதித்திடுவார்கள்! சம்பாதித்திடுவார்கள்! அதாவது, இந்த நாட்டை என்றென்றும் சூழ்ச்சியாகச் சுரண்டி வாழ வேண்டும் என்று நினைக்கின்ற சிறு கூட்டத்தார்கள் எப்போதுமே நாட்டில் சமய அடிப்படையிலோ, சமுதாய அடிப்படையிலோ, அரசாங்கத்தின் அடிப்படையிலோ பெரிய அளவில் ஒற்றுமையோ, கட்டுப்பாடோ, ஒருமைப்பாடோ, அமைதியோ, நிறுவனக் கட்டமைப்போ, நிர்வாக ஒழுங்கமைப்போ நிலைத்து உருவாகிடுவதை விரும்ப மாட்டார்கள்! விரும்ப மாட்டார்கள்! விரும்ப மாட்டார்கள்! விரும்பவே மாட்டார்கள்!

இத்தத்துவ அடிப்படையில்தான் இந்த நாட்டைச் சுரண்டி வாழ விரும்பும் பிறமண்ணினர்களும் அன்னியர்களும் சாதிகளின் அடிப்படையில் சமுதாயத்தையும், மதத்தின் அடிப்படையில் அரசியலையும் வெறிநாய் கிழித்த கந்தல் துணி போல் சின்னாபின்னப் படுத்தி வருகிறார்கள். இதனை இன்றைக்கு இராசராசனால் புரிந்து கொள்ள முடியவில்லை. எனவே, என்ன விலை கொடுத்தாவது மெய்யான இந்துமதத்தை மறுமலர்ச்சி அடையச் செய்தேயாக வேண்டும். அதற்காகப் பொய்யான ஹிந்துமதத்தின் கூறுபாடுகளையும், இயக்குநர்களான பிருமணர்களையும், அடிமைகளான இராசராசனைப் போன்றவர்களையும் முழுமையாக அழித்தொழிக்கும் பணியில் ஈடுபட்டேயாக வேண்டும். இந்த அழித்தொழிப்பு வேலையின் போதே மெய்யான இந்துமதம் செழிச்சியும், ஆட்சிமீட்சியும் அடையச் செய்யும் பணி துவக்கப் பட்டாக வேண்டும்.

அதற்காக, கடலுள் மறைந்த குமரிக் கண்டம் என்னும் இளமுறியாக் கண்டத்துப் பன்மலை யடுக்கம், தென்இமயம், தென்விந்தியம், தென்வேங்கடம் முதலான மலைகளைக் கருகுலமாகக் கொண்டு குருகுலங்களும், தருகுலங்களும், திருகுலங்களும் தமிழகமெங்கும் தொடர்ந்து உருவாக்கப் பட்டு அனைத்து வகையான அருளுலக வாரிசுகளும் தொடர்ந்து தமிழர்களுக்குத் தமிழர்களே சமய, சமுதாய, அரசியல் தலைவர்களாகவும், வழிகாட்டிகளாகவும், துணைவர்களாகவும் அமைந்திடுவார்கள்! அமைந்திடுவார்கள்! அமைந்திடுவார்கள்!

அப்படித் தமிழர்களைத் தமிழர்களே எல்லாத் துறைகளிலும் ஆட்சி புரியும் நிலைமை வளப்பட்டு வலிமைப் பட்டிட்டால்தான் பாம்பின் வாய்ப்பட்ட தேரை போல் பிருமணர்களிடம் மாட்டிக் கொண்டிருக்கும் தமிழ் மொழியையும், தமிழ் இனத்தையும் காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! காப்பாற்ற முடியும்! இதற்காகத்தான் பதினெண் சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகளை அருட்பேரரசின் பெரு மன்னனான இராசராசன் உடனடியாகத் தனது அரசாணைகளாக அறிவிக்க வேண்டும்.

ஆனால், மலைப்பாம்பு தன் இரையை வளைத்த பிறகு அந்த இரை அதனிடமிருந்து தப்ப முடியாது என்பது போல், இனிமேல் இராசராசனும், பிறமண்ணினர்களின் பிடியிலிருந்து விடுபட்டுத் தமிழ் மொழியையோ! தமிழ் இனத்தையோ! காப்பாற்ற முடியாது! காப்பாற்ற முடியாது! காப்பாற்ற முடியாது! காப்பற்றவே முடியாது! எனவேதான், யாம் நிலவறைக்குள் செல்வதாக முடிவெடுத்தோம்.

நிலவறைக்குள் செல்லும் நேரத்தில்தான், அரச குடும்பத்தார்களின் வேண்டுகோள்களை எண்ணிப் பார்த்து கருவூர்த் தேவனையே அனைத்து முடிவுகளையும் எடுத்துக் கொள்ளுமாறு கூறி அருட்பேரரசு காத்திட ஆவன செய்து செல்லுகிறோம். நிறைவுறாமல் இருக்கும் தஞ்சைப் பெரிய கோயில் போல்; அரசாணைகளாக நிறைவேறாமல் இலக்கிய வடிவிலேயே நிற்கும் பதினெட்டு அருளாட்சி ஆணைகள் போல்; தமிழினம் காக்கத் தெரியாமல் தடுமாறும் இராசராசனின் நிலை முழுமையடையாமலேயே இருக்கும்.

எமக்குப் பிறகாவது அவன் திருந்தாவிடில், இவனுடைய அண்ணன் ஆதித்த கரிகாலனுக்கு நேர்ந்த கதியே இவனுக்கும் நேரிடும். அதாவது, இவன் எதுவரை பிருமணர்களுக்கும், பணக்காரர்களுக்கும் ஆதரவாளனாக இருக்கின்றானோ, அது வரைக்கும்தான் இவனுக்குப் பாதுகாப்பு உண்டு. இல்லையேல், அவர்களால், எந்த நொடியும் இவனுக்கு இழிவும், அழிவும் ஏற்படும். எனவே என்றைக்காவது ஒரு நாள் தமிழ்நாட்டுச் சமயவாதிகளும், அரசியல்வாதிகளும் தங்களைத் தாங்களே நன்கு புரிந்து பிற மொழியார்களையும், பிற இனத்தார்களையும் தமிழ்நாட்டின் எந்தத் துறையிலும் தலைவர்களாகவோ, வழி காட்டிகளாகவோ, வழித் துணைவர்களாகவோ, முதலாளிகளாகவோ ஏற்காத ஒரு பொற்காலத்தை உருவாக்குவார்கள்! உருவாக்குவார்கள்! உருவாக்குவார்கள்!

அப் பொற்காலம் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி காலத்திலாவது உருவாகியே தீர வேண்டும். இல்லையேல், நாற்பத்தெட்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் காலம் வரை மெய்யான இந்துமத மூலவர்களாகவும், காவலர்களாகவும் உள்ள தமிழர்கள் நாடோடிகளாகவும், நாதி-யற்றவர்களாகவும், அடிமைகளாகவும், போலிகளாகவும், கூலிகளாகவுமே தொல்லைப்பட்டுத் துன்பப் பட நேரிடும். அந்த நிலை வந்துவிடக் கூடாது என்பதற்காகவே இம்மண்ணுலகம் முழுவதும் சுற்றி அனைத்து வகையான அருளுலக வாரிசுகளையும்

உருவாக்கினோம் யாம். அவர்களால் உலக ஆன்ம நேய ஒருமைப்பாடு ஏற்படும் காலத்திலாவது மெய்யான இந்துமதத்தின் மூலவர்களாகவும் காவலர்களாகவும் இருப்பவர்களுக்கு நலம் விளைந்திடும். அந்த எண்ணத்தின் நிம்மதியில்தான் நிலவறைக்குள் செல்கிறோம்.

யாம் ஏட்டளவிலும், நாட்டளவிலும் விட்டுச் செல்லுபவைகளையாவது நம்மவர்கள் உரியவர்களிடமிருந்து முழுமையாகத் தெரிந்து, அறிந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பிப் பெரிய அளவில் தமிழ்மொழி காக்க, தமிழ் இனம் காக்க, தமிழ்நாடு காக்கப் போராடும் பொற்காலம் உருவாகட்டும்! உருவாகட்டும்! உருவாகட்டும்!

## பின்னுரை

இந்தப் 'பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகள்' என்ற கட்டுரை சேலம் மாவட்டம் மோகனூர் உருத்திரம் பிள்ளையால் உரைநடையில் எழுதப்பட்டு (அதுவரை இந்தப் பதினெண் சித்தர் பீடாதிபதியின் அருளாட்சி ஆணைகள் கவிதை நடையில் இருந்திட்டன), கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம் பட்டியார் உ. இராமசாமிப் பிள்ளையால் மீண்டும் படியெடுக்கப் பட்டது.

பிறகு, இந்த ஆணைகள் கரூர் முடிகணம் காக்காவழியன் பண்ணையாடி சித்தர் காக்கையர் எனப்படும் காகபுசுண்டர் ம.பழனிச்சாமி பிள்ளை அவர்களால் எழுதப்பட்ட "தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூரின் வரலாற்றின்" பன்னிரண்டு தொகுதிகளில் பன்னிரண்டாவது தொகுதியின் இறுதிப் பகுதியாக அமைக்கப் பட்டிருக்கிறது.

எனவே, அருட்பேரரசாக உருவாக்கப் பட்ட பிற்காலச் சோழப் பேரரசு பற்றிய [கி.பி.785 முதல் கி.பி.1279 முடிய] பேருண்மைகளைத் தெரிந்து கொள்ளவாவது தமிழர்களில் யாராவது சிலர் அல்லது ஒருவர் பேரார்வத்துடன் முன்வந்தாவது இந்தப் பன்னிரண்டு வரலாற்றுத் தொகுதிகளையும் வெளிக் கொணரும் முயற்சியில் ஈடுபட வேண்டும் என்பதற்காகத்தான் இந்தக் கட்டுரை வெளியிடப் படுகிறது.

இதிலுள்ள எந்த ஒரு சொல்லோ, கருத்தோ பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியாலோ அல்லது வேறு யாராலோ கூறப்படவில்லை! கூறப்படவில்லை! கூறப்படவில்லை! கூறப்படவே யில்லை! அதாவது, இந்தக் கட்டுரையிலுள்ள எந்த ஒரு சொல்லும் குருவழி வாரிசுகளாலோ அல்லது கருவழி வாரிசுகளாலோ எழுதப் படவில்லை! எழுதப் படவில்லை! எழுதப் படவில்லை! எழுதப் படவேயில்லை!

ஏனெனில், இக்கட்டுரையிலுள்ள பெரும்பாலான சொற்களும் சொற்றொடர்களும் கருத்துக்களும் இந்த இருபதாம் நூற்றாண்டின் பிரதிபலிப்புக்கள் போலவே இருக்கின்றன. எனவே, 'பலமுறை உலகச் சுற்றுப் பயணங்களைச் செய்த ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரூர் அவர்களுடைய தொலைநோக்கும், அநுபவம் மிக்க போக்கும்தான் இந்த அருளாட்சி ஆணைகளின் வாக்கியங்களாகவும், வாசகங்களாகவும் வடிவெடுத்திருக்கின்றன' என்பதனை இன்றுள்ள தமிழர்களாவது புரிந்து கொள்ள வேண்டும்! புரிந்து கொள்ள வேண்டும்! புரிந்து கொள்ள வேண்டும்!

அப்பொழுதுதான் தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், பண்பாட்டுக்கும், நாகரிகத்திற்கும் கலைக் களஞ்சியங்களாக விளங்குகின்ற பீடாதிபதிகளின் படைப்புக்களனைத்தும் முழுமையாக அச்சேறி வெளிவரக் கூடிய பொன்னான வாய்ப்பு உருவாகிடும்! இன்னும் சொல்லப் போனால், சித்தர்களின் நெறிகள், முறைகள், கலைக் கருவூலங்கள், அறிவியல் சாதனைகள், அருளுலகப் போதனைகள்.... முதலியவைகள் அனைத்தும் வெளி வந்தால்தான் இம்மண்ணுலகின் வரலாறு முழுமை பெறும்! முழுமை பெறும்! முழுமை பெறும்! இப்பணியில் ஆர்வம் உள்ளவர்கள் ஆரவாரமின்றி அமைதியாகப் பணியாற்றத் தொடர்பு கொள்க!

- நிறுவன நிர்வாகக் குழு

இந்து மறுமலர்ச்சி இயக்கம்



இந்தப் படத்தில் இருப்பவரே பதினெண்சித்தர் பீடாதிபதியின் பதினெட்டு அருளாட்சி ஆணைகளை வழங்கிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி (கி.பி.785 - கி.பி.1040) அவர்கள். இவர் இதை, தாம் அரியணையில் அமர்த்திய மன்னர் மன்னன் அருள்மொழித் தேவன் எனும் இராசராசனுக்கு வழங்கினார். இவரே தஞ்சைப் பெரியகோயிலில் கோபுரத்திற்குப் பின்னால் நிலவறை வாயிலில் தவக்கோலத்தில் அமர்ந்து பொதுமக்களுக்கு அருள்வழங்குகின்றார். **தஞ்சைப் பெரியகோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார்** இவரே. இவரைப் பற்றிய வாழ்க்கை வரலாறுகளை இவருக்கு அடுத்து வந்த 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி **குருதேவர்** ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் அச்சிட்டு வழங்கியுள்ளார். இருந்தும் இவரது சன்னிதியில் இன்றும் '*சித்தர் கருவூரார்*' சன்னிதி என்று பிடிவாதமாக தவறாக எழுதிய பலகையை மாற்ற மறுக்கின்றனர்.

இதேபோல், இவரது சன்னிதியில் வழிபடும் அகத்தியர் சன்மார்க்க சங்கத்தினர் தொடர்ந்து இவரைப் பற்றித் தங்கள் விருப்பம்போல் கட்டுக்கதைகளைப் பரப்பிய வண்ணமே செயல்படுகின்றனர். **குருதேவரே** அகத்தியர் சன்மார்க்க சங்கத்தினருக்குப் பல விளக்கக் கட்டுரைகளை எழுதி அனுப்பியும், சங்கத்தினர் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய 11வது பதினெண்சித்தர் பீடாதிபதி அவர்களை '*கரூரிலிருந்து வந்தவர், அதனால் கருவூரார்*' என்பது போன்ற தவறான செய்திகளைப் பரப்பி வருகின்றனர்.

கரூரில் பசுபதீசுவரர் கோயிலில் இருக்கும் சித்தர் சன்னிதி 10வது பதினெண்சித்தர் பீடாதிபதி சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூறார் அவர்கள் தவத்திலாழ்ந்த நிலவறைக் கோயில். அவர் வாழ்ந்து செயல்பட்ட காலம் கி.மு.100 முதல் கி.பி.150 வரை. ஆனால், இருவேறு காலக்கட்டங்களில் வாழ்ந்தவர்களை ஒருவரே என்று அறியாமையால் பல சங்கத்தினர்களும் கூறி வருகின்றனர். **குருதேவர்** எழுதியுள்ள நூல்களைப் படித்தால் உண்மை வரலாற்றுச் சான்றுகளைப் பெறலாம்.



சென்னை, காரனோடையில் குருதேவர் அமைத்த கோயிலில் மட்டுமே உள்ள அம்மையப்பர் வடிவம்.